## "இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம்: தெற்காசிய சுதந்திர வர்த்தக வலயத்தினுடனான (SAFTA) ஓர் ஒப்பீட்டு ஆய்வு"


**Supervisor**
*Mr. AAM. Nufile,*
*Senior Lecturer,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**Researcher**
*Miss. A. Ajana,*
*Department of Social Sciences,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*


### ஆய்வுச் சுருக்கம்


1999 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட இலங்கை இந்திய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையானது (ISFTA) 2000 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்தது. இதன் கீழ் பண்டங்கள் தீர்வைகள் அற்ற பண்டங்கள், தீர்வை சலுகை வழங்கப்பட்டுள்ள பண்டங்கள்இ தீர்வை சலுகை வழங்கப்படாத பண்டங்கள் என மூன்று பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளன. இலங்கை- இந்திய உடன்படிக்கையின் முக்கிய நோக்கம் முன்னுரிமை வர்த்தக பங்காளருடனான வர்த்தகத்தின் மீதான தடைகளை அகற்றுவதன் மூலம் நீண்ட கால பொருளாதார வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் மேம்படுத்துவதாகும். இக்கட்டத்தில் தென்னாசிய சுதந்திர வர்த்தக பிரதேசம் ஒன்றுக்கான அவசியம் பெரிதும் உணரப்பட்ட போது 2006 இல் தெற்காசிய சுதந்திர வர்த்தக வலயம் (SAFTA) SAARC நாடுகளிடையே மேற்கொள்ளப்பட்டது. சார்க் அங்கத்துவ நாடுகளுக்கிடையில் சுதந்திர வர்த்தகத்தை அபிவிருத்தி செய்வதே SAFTA இன் நோக்கமாகும். எனவே இவ்வாய்வில் இவ் இரு ஒப்பந்தங்களின் செயலாற்றம் குறித்தும் அவற்றுக்கிடையோன ஒப்பீட்டை மேற் கொள்வதுமே இவ்வாய்வின் நோக்கமாகும். மேலும், இவ் ஆய்வில் இரு நாடுகளிற்கிடையே வர்த்தக உடன்படிக்கையை முன்னெடுப்பதால் கிடைத்துள்ள நன்மை தீமைகளை கண்டறிவதுமாகும். அத்துடன், இந்திய இலங்கையின் வர்த்தகத்தின் மீது தெற்காசிய சுதந்திர வர்த்தக வலயம் எடுத்து வரக்கூடிய தாக்கங்களையும் கண்டறிவதுமாகும்.

இவ்வாய்வானது, இரண்டாம் நிலைத்தரவுகளை அடிப்படையாக கொண்டு அமைந்துள்ளது. 2000 – 2012 வரையிலான காலத் தொடர்த் தரவுகளை அடிப்படையாக கொண்டு இரு மாறிகளுக்கு இடையிலான தொடர்பினை அடையாளம் காண்பதற்கும் தரவுகளை மதிப்பீடு செய்வதற்கும் "பிற்செலவு ஆய்வானது" (Regression Model) பயன்படுத்தப்படவுள்ளது. சேகரிக்கப்பட்ட தரவுகள் SPSS எனும் மென் பொருள் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன.

இவ்வாய்வின் மூலம் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையானது, இலங்கையின் தலா மொத்த உள்நாட்டு உற்பத்தி, வர்த்தக தொடர்பின் அபிவிருத்தி மட்டம், உட்கட்டமைப்பு வசதிகள் என்பவற்றிற்கான சிறந்த பிரதிநிதித்துவத்தை வழங்கும் எனவும் இலங்கை-இந்திய சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தெற்காசிய சுதந்திர வர்த்தக வலயம் என்பன இலங்கைப் பொருளாதாரத்துடன் நேர்க்கணிய தொடர்னைக் கொண்டிருகின்றது எனவும் இலங்கை-இந்திய சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்திற்கும் தெற்காசிய சுதந்திர வர்த்தக வலயத்துக்கும் இடையில் நேர்க்கணியத் தொடர்பு காணப்படுகிறது எனவும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையானது இலங்கை வர்த்தகத்தினை விரிவுபடுத்துவதோடு வர்த்தக பற்றாக்குறையினையும் குறைவடையச் செய்யும் மற்றும் அதிகளவில் பொருளாதாரத்தினை திறந்து விடும் நாடு அதிகளவு வர்த்தக செயற்பாடுகளை கொண்டிருக்கும் எனவும் கண்டறியப்பட்டது. சுதந்திர வர்த்தகம் மற்றும் சுங்கக் கூட்டு ஆகியவற்றின் கீழ் தீர்வை மற்றும் தீர்வையற்ற தடைகள் மேலும் விலகிக் கொள்ளப்படுமாதலால் வர்த்தகம் முதலீடு என்பன விரிவாக்கத்தை அடையும் எனக் கண்டறியப்பட்டது.



பிரதான சொற்கள்: ISFTA, SAFTA SAARC, Regression Model, and SPSS